Registered as a NewsPaper　பக்கங்கள் 04　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　Peoples Daily　மக்கள் தினசரி

நாதம்: 03　திருவள்ளுவர் ஆண்டு 2023　பங்குனி 20　(02 - 04 1992)　வியாழக்கிழமை　ஓசை: 44

## 16 வயது மாணவருக்கு அடையாள அட்டை

பதினாறு வயது அடங்கிய மாணவர்கள் தமது தேசிய அடையாள அட்டைகளை தமது பாடசாலைகள் மூலமாக பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை இந்த மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார் பதினாறு வயதுள்ளவர்களும் பதினாறு வயதிற்கு மேற்பட்டவர்களினதும் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அவர்களது பெயர்கள், புகைப்படங்களுடன் பிரதேச உதவி அரசாங்க அதிபர் மூலமாக ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர்களை ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த மாணவர்களின் விண்ணப்பங்களுக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

# இரு பொலிஸ் நிலையங்கள் மீது கிழக்கில் புலிகள் தாக்குதல்

## அதிகாரி உட்பட பலர் படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு பொலிஸ் நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதல்களில் ஒரு பொலிஸ் நிலையத்தில் மட்டும் ஒரு அதிகாரி உட்பட ஒன்பது பொலிஸார் காயமடைந்ததாகவும் அச் செய்தி மேலும் தெரிவித்தது.

ஒரு தாக்குதல் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தின் மீது நடத்தப்பட்டது. இத் தாக்குதலிலேயே ஒரு இன்ஸ்பெக்டர் உட்பட ஒன்பது பொலிஸார் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாவது தாக்குதல் காத்தான்குடி பொலிஸ் நிலையம் மீது மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இத்தாக்குதலில் பொலிஸாருக்கு ஏற்பட்ட சேதவிபரத்தை வெளியிட அரசு மறுத்துவிட்டது.

## தாக்குதல் நடத்திய பீரங்கிப்படகு புலிகளால் விரட்டியடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கடல்பகுதியில் நிலைகொண்டு பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வந்த கடற்படைப் படகுகள் புலிகளின் தாக்குதலையடுத்து திரும்பிச் சென்றன.

நேற்றுக் காலையில் இப்பகுதிக்கு வந்த இப்படகுகள் சுமார் அரைமணி நேரம் பீரங்கித் தாக்குதல் நடத்தியதை அடுத்து விடுதலைப் புலிகள் அணியொன்று பீரங்கிப்படகுகள் மீது தாக்குதல் நடத்தியது சுமார் நாற்பத்தைந்து நிமிட நேரம் நடைபெற்ற தாக்குதலையடுத்து பீரங்கிப் படகுகள் பின்வாங்கிச் சென்றன.

## ஆறு தமிழ் கிராமங்களில் துரித சிங்கள குடியேற்றம்

## கோஸ்ரிக் எடுத்துவர அனுமதி

(யாழ்ப்பாணம்)

சவர்க்கார உற்பத்திக்குப் பயன் தரும் ''கோஸ்ரிக் சோடா'' மேலும் எட்டுமெற்றிக்தொன் எடுத்துவருவதற்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வீரவேங்கை சித்தன்



மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரவேங்கை சித்தன் வீரச்சாவை

## 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர் பெயர்ப்பட்டியலை விரைவில் சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

1991 இல் நடைபெறாமல் தடைப்பட்டிருந்த 5ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சை 1992 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடாத்துவதற்கு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படுகின்றன ஆகையினால் இப்பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பிய பாடசாலை அதிபர்கள் விண்ணப்பித்தமாணவர்களின் பெயர்ப் பட்டியல்களை 5.ஏ. படிவங்களில் தயாரித்து தங்கள் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கும்படிவேண்டப் படுகின்றனர். இதற்கான படிவங்களை கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்இதனை யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர்இ சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார் (பா)

## திட்டமிட்டபடி பரீட்சை நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்விப பொதுத்தராதர உயர்தர விசேட பரீட்சைதிட்டமிட்டபடி நேற்று சுமுகமானசூழ்நிலையில் நடைபெற்றது.

மாவட்டத்தின்சில பரீட்சை நிலயங்களுக்கு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தார். நேற்று மாலை கிடைத்த தகவல்களின் படி எவ்வித இடையூறுகளும் இன்றி சுமுகமான முறையில் பரீட்சை நடைபெற்றிருக்கிறது. பரீட்சைகளில் குளறுபடிகள் அல்லது தடங்கள் ஏற்பட்டதாக எந்த இடத்தில் இருந்தும் தகவல்கள் இடைக்கவில்லை (பா)

## கல்வி நிர்வாகத்தை சீராக்க போராட அணிதிரளுமாறு ஆசிரியருக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சீர் குலைந்திருக்கும் கல்வி நிர்வாகத்தை சீராக்குவதற்கு தமிழர் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு போராடத் தயாராகும்படி அறைகூவல் விடுத்துள்ளார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலளர் த. மகாசிவம். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அமரர் வனசிங்கா நினைவுப் பேருரை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்தும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அதிகாரப் பரவலாக்கல் ... யும், மத்திய அமைச்சு ஒருவரையும் நியமித்து ஒரே பதவிக்கு மூன்றுபேர் குத்துச் சண்டைபோடும் நிலைமை ஏற்பட்டுள்ளது

குற்றச் சாட்டின் அடிப்படையில் தண்டிக்கப்பட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மீனவர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி கல்முனைப் பகுதியிலிருக்கும் இராணுவத்தினர் நேற்று முன்தினம் மீனவர்மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் இப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் தொழிலைத் தொடர முடியாமல் கரை திரும்பினர்.

## இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பனைமரத்திலிருந்து தவறி வீழ்ந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு குமுழமுனையைச் சேர்ந்த இருபத்திரண்டு வயதுடைய இளைஞரே

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பொது சுகாதார பரிசோதகர் நியமனம் வழங்கப்படாமை; பரிசோதகர் சங்கம் கவலை

[யாழ்ப்பாணம்)

கம் யாழ் கிளை கவலை தெரிவித்துள்ளது

# ஆறு தமிழ் கிராமங்களில் துரித சிங்கள குடியேற்றம்

(திருக்கோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த ஆறு கிராமங்களில் சிங்களவர்களைக் குடியேற்ற துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் சில உதவி அரசாங்க அதிபர்களும் பாலம்போட்டாறு. உப்பாறு, இறால்குழி. ஆலங்கேணி, ஈச்சந்தீவு ஆகிய கிராமங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு முதல் இராணுவ நடவடிக்கைகள் மூலம் இக் கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு வருவது தெரிந்ததே.

மேலும் புதிய குடியேற்றத் திட்டங்களில் எழுபது சதவீதம் சிங்களவர்களும், இருபத்தைந்து சதவீதம் முஸ்லிம்களும், ஐந்து சதவீதம் மட்டுமே தமிழர்களும் குடியேற இராணுவத்தினர் அனுமதி வழங்குகின்றனர் இதையடுத்து இத்தகைய குடியேற்றத் திட்டங்களில் போய் குடியேற தமிழ் மக்கள் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

## துப்பாக்கிச் சூடும் எறிகணைத் தாக்குதலும்

(யாழ்ப்பாணம்)

தச்சன்காடு, வீமன்காமம், வளலாய் பகுதியிலிருக்கும் இராணுவக் காவல் அரண்களிலிருந்து நேற்று முன்தினமிரவும் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகமும், எறிகணைத் தாக்குதலும் மேற்கொண்டனர்.

## கொழும்பு மாநகரசபை பத்திரத்தில் தமிழ் கொலை

(கொழும்பு)

தமிழில் வெளிவந்த கொழும்பு மாநகர சபையின் ஒழுங்குப் பத்திரத்தில் தமிழ்க் கொலை இடம் பெற்றுள்ளது.

பாராளுமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரலை அறிவிக்கும் ஒழுங்குப் பத்திரம் போன்று கொழும்பு மாநகர சபையும் அதன் கூட்ட நிரல்கள் குறித்து பத்திரம் ஒன்றை இதுகால வரை ஆங்கிலத்திலேயே வெளியிட்டு வந்தது.

கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயராக கே கணேசலிங்கம் பதவி வகிப்பதைத் தொடர்ந்து இம்மாநகர சபையின் ஒழுங்குப் பத்திரம் தமிழில் தற்போது வெளிவந்துள்ளது.

இம் மாநகரசபைக் கூட்டத் தொடர்பான ஒழுங்குப் பத்திரத்தில் தமிழ்க் கொலைகள் வரிக்கு வரி இடம் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

கூட்டம் நடைபெறும் கிழமை கூட செவ்வாய்க் கிழமை என்பது ஈசவ்வாய்க் கிழமை என்றும் கனம் ஐயா என்பது கணம் ஐபா என்றும் மண்டபத்தில் எனபது ''கமண்டபத்தில்'' என்றும் கொழும்பு என்பது கொனாழும்பு என்றும் கூட்டம் என்பதற்கு கூட்ம எனவும் வீரர் என்பதற்கு வீநூர் என்றும் பிழைகள் இடம் பெற்றுள்ளன.

இது தமிழ் மொழிக் கொலையா அல்லது வேற்று மொழியா எனும் அளவுக்கு அப்பத்திரத்தில் தமிழ் எழுத்துக்கள் பிரசுரமாகியுள்ளன.

## சிசுவை கைவிட்ட தாய் காவல்துறையில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தான் பெற்றெடுத்த ஒருநாள் சிசுவை பாழடைந்த வீட்டில் அனாதரவாகக் கைவிட்டு தப்பியோட முற்பட்ட தாய் ஒருவர் தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்

கடந்த இருபத்தைந்தாம் திகதி த. இராஜேஸ்வரி(வயது 33-உருத்திரபுரம் கிளிநொச்சி) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். மறுநாள் வீடுசெல்ல அனுமதிக்கப்பட்டதும் ஸ்ரான்லி வீதியூடாக மேற்படி சிசுவுடன் வந்த இவர் அங்கிருந்த பாழடைந்த வீடு ஒன்றிற்குள் சென்று சில நிமிடங்களில் வெறுங்கையுடன் வெளியேறியதை அவதானித்த வர்த்தகர் ஒருவர் சந்தேகம் கொண்டு வீட்டை எட்டிப்பார்த்தபோது வேலியோரத்தில் அச்சிசு கிடப்பதைக் கண்டதும் மேற்படி தாயாரை அழைத்து வினவிய போது அவருடைய பதில் சந்தேகத்தைக் கொடுத்ததைத் தொடர்ந்து இத் தாயாரும் சிசுவும் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவருக்கு ஏற்கனவே நான்கு பிள்ளைகள் உள்ளனர். தற்போது காவல்துறையினர் இது தொடர்பான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.



மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரவேங்கை சித்தன் வீரச்சாவை தழுவிக் கொண்டார் கடந்த இருபத்தெட்டாம் திகதி நிகழ்ந்த மோதலில் வீரச்சாவை தழுவிய சித்தன் பூவரசம் குளத்தை (வவுனியா) பிறப்பிடமாகக்கொண்டவராவார்.

## வீரவேங்கை ஜெகநாத்



கடந்த இருபத்தெட்டாம் திகதி மணலாறு காட்டுப்பகுதியில் பதுங்கியிருந்து தாக்கிய இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் ஜெகநாத் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். வீரவேங்கை ஜெகநாத் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

## வாழ்க்கைச் செலவுப்படி ஓய்வூதியர்கள் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி 260 ரூபாவை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்காதது நியாயமற்றதும், பாரபட்சமானதுமான செயலாகும்.

இவ்வாறு அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கத் தலைவர் ஸ்ரான்லி பெரேரா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவுப்படி 260ரூபாவை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் வழங்குவது நியாமானது என்று ஓய்வூதிய ஆணையாளர் தெரிவித்த கருத்தைச் சங்மகம் வரவேற்கிறது என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1988 ஜூன் மாதம் 1ஆம்

(4ஆம் பக்கம் பார்க்க)

ரர் வனசிங்கா நினைவுப் பேருரை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்தும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அதிகாரப் பரவலாக்கல் என்ற போர்வையில் யாழ் மாவட்டத்தில் கல்வி, நிர்வாகம் சீர்குலைந்துள்ளது. ஒரு பதவிக்கு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஒருவரையும் மாகாண அமைச்சு ஒருவரை

## மஹரகம புற்றுநோய்

## சிகிச்சைக் கருவி பழுது 50,000 நோயாளர் பாதிப்பு

(கொழும்பு)

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் புற்றுநோய்ச் சிகிச்சைக் கருவிகள் பழுதடைந்திருப்பதால் நாடெங்கிலும் சுமார் ஐம்பதாயிரம் புற்றுநோயாளர்கள் மரணத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளார்கள்.

கருவிகள் பழுதடைந்திருப்பதாகக் கூறி வைத்தியசாலை ஊழியர்கள், நோயாளர்களைத் திருப்பி அனுப்புவதாகச் சொல்லப்படுகிறது. கருவிகள் சரியாகப் பராமரிக்கப் படாததால் அவை பழுதடைந்துள்ளதாக பெயரை வெளியிட விருப்பாத மேற்படி வைத்தியசாலை டாக்டர் ஒருவர் கூறினார்.

மூன்று கோபால்ட் கதிர் இயந்திரங்கள்வைத்தியசாலையில் உள்ளன. அதில் ஒன்று கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. மற்ற இரண்டும் அடிக்கடி பழுதடைவதாக மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நாளொன்றுக்கு சுமார் 300 புற்று நோயாளர் இந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பஞ்சாபில் குண்டுவெடிப்பு

(டில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் லூதியானா நகருக்கு அருகே நேற்றுக்காலை இடம்பெற்றகுண்டு வெடிப்புஒன்றில் காவல்துறை கண்காணிப்பாளர் திவானா உயிரிழந்தார். ஒரு கிராமத்திலிருந்து லூதியானா நகரை நோக்கி திவானா காரில் சென்று கொண்டிருந்த போது இக் குண்டு வெடிப்பு நேர்ந்துள்ளது.

## நியமனம் வழங்கப்படாமை; பரிசோதகர் சங்கம் கவலை

[யாழ்ப்பாணம்)

சுகாதார மேற்பார்வையாளர் இருவருக்குப் பதில் பொது சுகாதார பரிசோதகர் நியமனம் வழங்கப்படாமை குறித்து இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் யாழ் கிளை கவலை தெரிவித்துள்ளது

சுத்தம் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவனத்தில் இரண்டு வருடக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கே பொது சுகாதார பரிசோதகர் பதவி வழங்கப்படுகிறது அப்படியிருக்க போதிய தகைமை இல்லாதவர்களுக்கு இப் பதவி வழங்கப்பட்டிருப்பது குறித்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அதிருப்தி தெரிவிக்கிறார்கள். மேற்படி நியமனங்களை நியாயப் படுத்துவதற்கான முன்னுதாரணங்களும் இல்லை.

இவ்வாறு இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பியகமையில் முதலாவது பிராந்திய செயலகம்

[கொழும்பு]

பிராந்திய ரீதியில் நிர்வாகத்தைப் பன்முகப் படுத்தும் அரசாங்கத்தின் முடிவின் கீழ் முதலாவது பிராந்திய செயலகம் விரைவில் பியகமையில் அமைக்கப்பட விருக்கிறது என்று பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இச் செயலகத்தில் திருமண பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கவும் திருமணங்களைப் பதிவு செய்வதற்கும், திருமண, பிறப்பு, இறப்பு சம்பந்தமான ஆவணங்கள் பற்றிய சகல அலுவல்களையும் கவனிக்குமாறும் இவ் அமைச்சு பணித்துள்ளது.

தற்பொழுது இவை சம்பந்தப் பட்ட சகல ஆவணங்களும் கம்பஹா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தினால் கையாளப்படுகின்றன. இந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தியாகதீபம் அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டம்

தியாகதீபம் அன்னை பூபதி உண்ணா நோன்பிருந்து தமிழீழ விடிவிற்காக தன்னுயிர் துறந்த நான்காம் ஆண்டு நினைவு நாளை நினைவு கூருமுகமாக இன்று வலிகாமத்தில் உண்ணா விரதமும் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. இன்று காலை 8மணிக்கு சண்டிலிப்பாய் வட்டவைப் பிரதேசத்தின் விளான் சந்தியில் ஆரம்பமாகவுள்ள அன்னை பூபதி உண்ணா விரத நிகழ்வு மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. இவ் அடையாள உண்ணா விரதத்தைத் தொடர்ந்து மாலை 7மணிக்கு அங்கு பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த சுடர், மதிவாணி, மகாதேவன் மாஸ்ரர் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இரவு பல கலை நிகழ்ச்சிகளும் அங்கு இடம் பெறவுள்ளன.

# திராணி இருந்தால் அ.தி.மு.க.வை தேர்தலில் சந்திக்கட்டும்

--ஜெயலலிதா சவால்

(சென்னை)

'எதிர்க்கட்சிகளுக்கு திராணி இருந்தால் அ.தி.மு.க.வை உள்ளூராட்சித் தேர்தல்களில் சந்திக்கட்டும்' என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சவால் விடுத்தார்.

மாநகர சபைகள் பஞ்சாயத்து யூனியன்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கான விசேட அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கான சட்டமூலம் மீதான விவாதம் சட்ட சபையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்றபோது குறுக்கிட்ட முதலமைச்சர் மாநிலத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதிலான கட்டுப்பாட்டையும், உறுதியையும் தனது அரசாங்கம் வெளிப்படுத்தும் எனக் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த அரசாங்கம் பயப்படுகிறது என சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். நான் எட்டு மாதங்களுக்கு முன்னர் முதலமைச்சராக பதவியேற்ற உடனேயே கூறினேன் ஆகஸ்டிற்கு முன்னரேயே உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தி முடிக்கப்படும் என்று தி.மு.க. பாட்டாளி மக்கள் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் ஜனதாதள் உட்பட எதிர்க்கட்சிகள்அதை எதிர்த்தன.

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதில் அ.தி.மு.க. ஏன் அவசரம் காட்டுகிறது என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர். தேர்தல்களை பின்போடுமாறும் கேட்டனர். அத்தேர்தல்களை மக்கள் அப்போது எதிர்க்கவில்லை. தாங்கள் துடைத்தெறியப் படுவோம் என்பதை அப்போது எதிர்க்கட்சிகள் தெரிந்திருந்தன. இந்தப் பயத்தின் காரணமாகவே தேர்தலை பின்போடக் கோரினர். இப்போது இந்த உண்மையை மறைக்க எதிர்க்கட்சியினர் ஏன் முயற்சிக்கிறார்கள் என்பதுதான் புரியாமல் இருக்கிறது.

தேர்தல்களுக்கு முகம் கொடுக்க அ.தி.மு.க. ஒரு போதும் தயங்கியதில்லை. நான் பதவி பெற்ற 90 நாட்களுக்குள் சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களுக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கும் அறிவிப்புச் செய்தேன். நாம் தேர்தலுக்கு முகம் கொடுக்க தயாராயிருந்தோம். எதிர்க்கட்சிகள் அவ்வாறு இல்லை.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவில்லை என்றால் அதற்குக் காரணம் அரசாங்கத்திற்கு வேறு பணிகள் இருந்தமையே. வரவு-செலவு திட்டத்தையும் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. கடந்த எட்டு மாத காலத்தில் சட்ட சபையின் நான்கு கூட்டத் தொடர்கள் கூட்டப்பட்டன.

அடுத்த இரண்டு மாதங்களில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த முடியாது என்பதை எதிர்க்கட்சிகள் தெரிந்தே வைத்திருக்கின்றன. தற்போதைய சட்டசபைக் கூட்டத் தொடர் ஏப்ரல் இறுதிவரை செல்லும்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் மே மாத இறுதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றத்தின் உத்தரவு வேறு இருக்கிறது. இந்த சங்கதிகள் சகலவற்றையும் தெரிந்து புரிந்து கொண்டுதான் இந்த எதிர்க்கட்சிகள் இப்போது உடனடியாக உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துமாறு கோருகின்றன. இது ஒரு விநோதம்' என்று ஜெயலலிதா கூறினார்.

# நவீன பாஞ்சாலி ஜெயலலிதா சபையில் சபாநாயகர் விளக்கம்

(சென்னை)

''இருபதாம் நூண்றாண்டின் நவீன பாஞ்சாலி சபதமே முதலமைச்சராக அவரை இன்று இச்சபையில் அமர வைத்திருக்கிறது'' என்று தமிழக சட்டசபை சபாநாயகர் சேடப்பட்டி ஆர் முத்தையா தெரிவித்துள்ளார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் சட்டசபையில் ஜெயலலிதா மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து சட்டசபையில் தெரிவிக்கப்பட்டபோது சபாநாயகர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

1989 மார்ச் 25 தமிழகசட்டசபையின் சரித்திரத்தில் ஒரு கரிநாள். அதுபோன்ற சம்பவங்கள் எங்குமே ஒரு போதுமே இடம் பெறக்கூடாது என்பதே எனது பிரார்த்தனையாகும் என்றும் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின்உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களை கருத்தில் கொண்டு இந்திய மத்திய அரசாங்கம் அவருக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் சேடப்பட்டி ஆர் முத்தையா வேண்டுகோள் விடுத்தார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் நல்லூர் திரிசாரணர்கள் அனைவருக்கும் வரும் ஆறாம் திகதி பிற்பகல் ஐந்து மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக்கல் லூரியில்


**Bata** பாட்டா

வடபகுதி மக்களின் நலன் கருதி இப்போது வவுனியா நகரில் மொத்த விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வரும் புத்தாண்டை முன்னிட்டு 14 % முதல் 25 % வரை கழிவு விற்பனை நடைபெறுகின்றது.

தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

பாட்டா மொத்த விற்பனை நிலையம்
இல. 35, மில்றோட்,
வவுனியா.

( 8492 )



வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகளின் சந்தைப்படுத்தல் மையத்திற்கான

## ஆட்சேர்ப்பு விளம்பரம்

### 1. நிர்வாகச் செயலாளர்

தகைமை:- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியோ அல்லது அதற்குச் சமனான கல்வித்தகைமையுடையவரும் காரியாலய முகாமைத்துவப் பயிற்சியும் ஐந்து வருடத்திற்குக் குறையாத அனுபவமும் உடையவர்.

சம்பளம்: சகல படிகளும் உட்பட தகைமைகளுக்கேற்ப ரூ. 3,000/- க்கு குறையாது பேசித் தீர்க்கப்படும்.

### 2. சந்தைப்படுத்தல் முகாமையாளர்

தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியும், மாதம் 25 லட்சத்திற்குக்குறையாத வியாபாரச் சுழற்சியுள்ள நிறுவனமொன்றின் ஐந்து வருடத்திற்குக் குறையாத சந்தைப்படுத்தல் அனுபவமும் உள்ளவர்.

சம்பளம்: சகல படிகளும் உட்பட கோரப்படும் தகுதியைக் கொண்டிருக்கும் அடிப்படையில் ரூபா. 5000/- க்கு குறையாமல் வழங்கப்படும்.

### 3. மொத்தக் களஞ்சியப் பொறுப்பாளர்

தகைமை:- க. பொ. த. உயர்தர சித்தியுடன் மாதாந்தம் ரூபா இருபது இலட்சம் சுழற்சிக்குக் குறையாத வர்த்தக ஸ்தாபனமொன்றில் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியில் 5 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உடையவர்.

சம்பளம்:- தகைமைகளுக்கமைய சகலபடிகளும் உட்பட ரூ 2000/- க்கும் ரூ 3000/- க்கும் இடையில் பேசித் தீர்க்கப்படும்.

விசேட குறிப்பு:- இப்பதவி யாழ்குடாநாடு முழுவதும் உள்ள சந்தைப்படுத்தல் நடவடிக்கையுடன் வெளிக்களக் கடமையைக் கொண்டிருப்பதால், அதற்கேற்ற உடல்வாகும், மனப்பக்குவமும் உள்ளவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. மதுபானம் அருந்தும் பழக்கமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படவில்லை.

2ஆம், 3ஆம் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பிணை கட்டத் தயாராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அனைவரும் கல்விச் சான்றிதழ்களுடனும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களுடனும் 12 04. 1992 ஞாயிறு காலை 9. 00 மணிக்கு 499, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

பொதுமுகாமையாளர்

வடமாகாண தெ. ப. பொ. கூ.
சங்கங்களின் சமாசம்
யாழ்ப்பாணம்.

(சி-4204)


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

விசேட பொதுக் கூட்டம்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



கப்டன் முரளி
(கந்தசாமித்துரை சிறீகரன்)

தோற்றம்: 10. 05. 61
வீரச்சாவு: 02. 04. 87

தானைத் தலைவன் வழியில்
தாயகம் மீட்கப் புறப்பட்டீர்
செந்நீர் சிந்தினீர்
வானக் கருவியால் மடிந்தீர் ஆனாலும்
இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்.

வல்வெட்டித்துறை. - குடும்பத்தினர்

(சி/4125)

## நினைவு கூருகின்றோம்...

### 1992. 04. 02

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் கண்டிவீதி 18ஆம் போர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவ தொடர் வண்டி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2ஆம் லெப். வதனன்** (சபாபதி சிவபாலன்- 6ஆம் படிவம் வாரிக்குட்டியூர், வவுனியா)

**பெஞ்சமின்** (கந்தையா பாலசுந்தரம்-சேனைப்புலவு நெடுங்கேணி, மணலாறு)

**மோகன்** (யாக்கோப் தற்குரூஸ் அலெக்ஸ்சாண்டர்- தோட்டவெளி, தாராபுரம், மன்னார்)

**யோண்** (லேனாட் இறிஸ்ரி மொறாயஸ்-வங்காலை மன்னார்)

1987ஆம் ஆண்டு மயிலிய தனையில் சிறிலங்காப்படை முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். ஜஸ்ரின்** (யோசப் தனசீலன் மைக்கல் அன்ரன் - தலைமன்னார், மன்னார்)

**2ஆம் லெப். மார்சல்** (விக்கினராசாசந்திரவேல்- முழங்காவில், மன்னார்)

**லெப். பாபு** (செல்வநாயகம் ரவீந்திரன் - சிவபுர வீதி, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)

ருக்கும் வரும் ஆறாம் திகதி பிற்பகல் ஐந்து மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக்கல் லூரியில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு தவறாது சமூகம்தரும்படி நல்லூர் பிரிவு திரிசாரணர்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

## மெய்வல்லுனர் போட்டி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் வித்தியாலயத்துக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் அதிபர் த. க. தங்கராஜா அவர்கள் தலைமையில் கடந்த 24. 3. 92 மாலை 2. 00 மணிக்கு நடைபெற்றது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் அவர்கள் கலந்துகொண்டார். வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை திருமதி வேலாயுதம் வழங்கினார்.

இப்போட்டியில் நீல இல்லம் 245 1/2 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் மஞ்சள் இல்லம் 228 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் சிகப்பு இல்லம் 198 1/2 புள்ளிகளைப் பெற்று மூன்றாம்இடத்தையும் பெற்றன.


## உயர் கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி

பேராதனை பல்கலைக்கழக G. A. Q 92 / 93 மாணவர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வந்துள்ளன. பதிவதற்கான இறுதித் திகதி:- 05. 04. 92

(சி/4116) பதிவாளர்



இல. 33, மில்றோட்,
வவுனியா.

(2402)


## முதலாவது பிறந்த தினம்



### சித்திரவேல் துவாரகா

உதயம்: 02. 04. 91

எங்கள் தவப்பயனே
இறைவன் அருள் மலரே
பொங்கும் நலம்பெற்று
பல்லாண்டு நீ வாழி!

இன்றைய பிறந்த தினத்தில் வாழ்த்தும் அன்புள்ளங்கள்

துஷ்யந்தி றோட்,
முல்லை வீதி,
தருமபுரம்.

சித்திரவேல் (தந்தை)
கனகமணி (தாய்) அண்ணாமார்,
அக்காமார், பெரியப்பா,
பெரியம்மா, அன்ரிமார்.

(சி/4123)

யாழ். மாவட்டம்

## விசேட பொதுக் கூட்டம்

இடம்: புதிய விஞ்ஞானக் கல்விக்கழகம்
(எழிலகம் முன்பாக)

காலம்: 03-04-1992 வெள்ளிமாலை4.00மணி

விடுமுறை கால வகுப்புக்கள் பற்றியும், ஏனைய சில முக்கிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும் தவறாது சமுகந்தரவும் வி. பு. ம. மு பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள்.

(2403) - பொதுச் செயலாளர்


## பாரதிதாசன் கல்வி நிறுவனம்

(BECON)

**A/L 92** புதிய பிரிவு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| கணக்கியல் | — | யோகராஜா / சௌந்தி |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| தமிழ் | — | மீரா |
| இந்துநாகரிகம் | — | பாலா |
| புவியியல் | — | ஜோசப் |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் |

ஆரம்பம்: 02- 04- 1992

காலை: 8. 00 மணி

கணக்கியல்
சௌந்தி
கம்பனி க/கு
ஆரம்பம்: 02. 04. 1992
வியாழன் : 8. 00 A. M

(4122)


லெப். பாபு (செல்வநாயகம் ரவீந்திரன் - சிவபுர வீதி, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)

இதே தாக்குதலின் போது காயமுற்ற நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் வல்லைப்பகுதியில் வைத்து சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலினால் வீரச்சாவெய்திய

**கப்டன் முரளி** (கந்தசாமி சிறிதரன் - வேம்படி, வல்வெட்டித்துறை)

**பாலச்சந்தர்** (ஞானசேகரம் லட்சுமிகரன் - முள்ளியான் வெற்றிலைக்கேணி)

**விடுதலை** (ஜோண் பொஸ்கோ யோகநாதன் தாளையடி)

**சங்கர்** (கந்தப்பு சூரியகுமார் - கரவெட்டி மத்தி)

**விந்தன்** (பூபாலசுந்தரம் ஞானகுரு - ஊறணி வல்வெட்டித்துறை)

**சிவா** (சின்னத்தம்பி சிவதாஸ் - தேனாவளவு கரவெட்டி தெற்கு)

**2ஆம் லெப். சேவியர்** (யோசப் தனசீலன் - வெற்றிலைக்கேணி)

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு. மாங்கேணிப்பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வீரச்சாவெய்திய

**லிங்கன்** (நல்லதம்பி அன்ரனி - வாழைச்சேனை, மட்டக்களப்பு)

1989ஆம் ஆண்டு திருக்கோணமலை கட்டைபறிச்சான் பகுதியில் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதல் சம்பவமொன்றில் வீரச்சாவெய்திய

**கப்டன் சத்தியன்** (புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி- தங்கநகர் கிளிவெட்டி, திருக்கோணமலை)

1991ஆம் ஆண்டு பனையூரில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**மஞ்சித்** (ரமேஸ் றொபேட் -செட்டிகுளம், வவுனியா)

நானாட்டானில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**சிவகாந்தன்** (அ. தவநேசன் - சுன்னாகம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(சி-4201)

## சிந்தனைக்கு

ஒரு மனிதன் இன்னொரு மனிதனின்
செயல்களுக்காகத் தண்டிக்கப்படக் கூடாது

-சார்லஸ் லிம்மன்ஸ்.

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 02-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
க பெ எண்

## வெளியுறவு அமைச்சரை பலியிட்ட பிரதமர்

இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அண்மையில் சுவிட்சலாந்து சென்றிருந்த அமைச்சர் சோலங்கி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி சம்பந்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படும் போபர்ஸ் பீரங்கி ஊழல் தொடர்பாக சுவிஸ்சனாந்து வெளியுறவு அமைச்சருடன் உரையாடியதாகவும், விசாரணையைத் தாமதிக்குமாறு கடிதம் ஒன்றைக் கையளித்ததாகவும் எதிர்க்கட்சிகள் தெரிவித்த குற்றச்சாட்டை அடுத்தே பதவி விலகியுள்ளார். பிரதமர் நரசிம்மராவுடன் கலந்து பேசிவிட்டே அமைச்சர் சோலங்கி பதவி விலகியதாகத் தெரிகிறது.

இந்தியாவில்எதிர்க்கட்சிகள் தெரிவித்தகண்டனக்கைத் தொடர்ந்துஅண்மையில் ஆளும் கட்சி அமைச்சர்ஒருவர் பதவிவிலகியமைபெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் ஓர் விடயமாகவே உள்ளது போபர்ஸ் பீரங்கி ஊழலுக்கும் ராஜீவ்காந்திக்கும் தொடர்பு உள்ளது எனக் குற்றச்சாட்டு வெளிவந்த போது பதவியில் இருந்த ராஜீவ் காந்தி அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவோ பதவி விலகவோ சிந்திக்கவில்லை. குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய எதிர்க்கட்சியினரினதும், பத்திரிகைகளினதும் வாயை மூடவே அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டது.

ஆனால் சோலங்கி இராஜினாமாச் செய்தமை மிகவும் அரசியல் முக்கியத்துவம்வாய்ந்ததொன்றாகும். இந்த இராஜினாமா இந்தியப்பிரதமர் நரசிம்மராவின் அரசியல் சதுரங்கத்தில் நிகழ்ந்த ஒருகாய் நகர்த்தலாகும் பிரதமர் நரசிம்மராவின் சிறுபான்மை அரசிற்கு முதல் சோதனையாக அமைந்த வரவு செலவுத்திட்டம் ஒருவாறு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது. வரவு செலவுத் திட்டத்தின் சில பகுதிகளை பாரதீய ஜனதாக்கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் பலவும் எதிர்த்தபோதும் எதுவித விட்டுக் கொடுப்பும் இல்லாமல் சிறுபான்மை அரசாங்கம் நிறைவேற்றி விட்டது.

அதாவது பிரதமர்நரசிம்மராவின்'கருத்தொற்றுமை அரசியலில்' வரவு செலவுத் திட்டம் குறித்து எதுவித கருத்தொற்றுமையும் ஏற்படாமலே வரவு செலவுத் திட்டம் நிறைவேறியுள்ளது. ஆனால் இதே போன்று தொடர்ந்தும் அரசியலை நடத்திச் செல்வதில் இந்திரா காங்கிரஸிற்குச் சிக்கல் உள்ளன.

இந்த வருடம் ஜூலை மாதம் 24ஆம் திகதியுடன்

# '30வீதமானோரை பலி கொடுக்க தயார்'

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னர் நாகெர்னோ - காராபாக் (Nagorno-Karabak h) சமர் உக்கிரமடைகிறது. ஆர்மினியரோ - அஜர் பைஜானியரோ விட்டுக்கொடுக்கத் தயாரில்லை.

மாலிபெலி (Mali'eii) யின் சண்டை முடிவடைந்த மறு நாட்காலை கொள்ளைக் கும்பல்கள் நாகொர்னோ காராபாக் கிராமத்துக்கு தங்கள் அயலவர்களாக முன்பிருந்தவர்கள் விட்டுச்சென்ற ஏதாவது விலையுயர்ந்த பொருட்களைச் கொள்ளையடிக்கும் நோக்கில் வந்திறங்கினர். இரு நாட்கள் நடந்த சண்டையில் ஆர்மேனிய இனட்படை வீரர்கள் அக்கிராமத்திலிருந்த அநேகமான வீடுகளை எரித்துவிட்டனர். அப்படியிருந்தும் இந்த அஜர்பைஜான் மக்கள் விட்டுச் சென்ற வீடுகளிலிருந்து சில பொருட்கள் கிடைத்தன. ஒரு அதிஷ்டசாலியான சுத்திகரிப்புத் தொழிலாளிக்கு நான்கு சாப்பாட்டு அறை நாற்காலிகள் கிடைத்தன. இன்னொருவருக்கு ஒருகோழிக் குஞ்சு கிடைத்தது. 42 வயதான மிசா அவற்றேசியன் நல்ல நிலையில் உள்ள இரு மெத்தைகளைக் கைப்பற்றினார். சிறுநேரம் ஓய்வெடுக்கும் போது அவர், நாங்கள் செய்வது சரி என நினைக்கிறீர ? என்று தன்னைத்தானே வினவினார். விரைவாகவும் அழுத்தமாகவும் தனது கேள்விக்குத் தானே பதிலிறுத்தார். மற்றவர்கள் செய்வதை நாமும் செய்கின்றோம் என்றவர். அஜர்பைஜானியர் இதைத்தான் எப்போதும் செய்தார்கள். ஆகையால் நாம் செய்வது சரி என்றார்.


ஆர்மேனியர்களும், அஜர்பைஜனியர்களும் பல பிரச்சினைகளைத் தங்களுக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. முன்னாள் சோவியத்தின் குடியரசுகளான ஆர்மேனியாவும் அஜர்பைஜானும் நான்கு வருடங்களாக இன ரீதியான வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த இனத்துவேச வன்முறைகளில் நூற்றுக்கணக்கில் அஜர்பைஜான் முஸ்லிம்களும், ஆர்மேனியக் கிறிஸ்தவர்களும் இறந்துள்ளனர். அத்துடன் இவ்வன்முறைகள் ஆயிரக்கணக்கில் இருநாட்டு மக்களையும் இடப்பெயர வைத்துள்ளது அஜர்பைஜானால் முற்றாகச் சூழப்பட்டுள்ள 1700 சதுரமைல் பரப்பைக் கொண்ட நாகொர்னோ காராபாக் பகுதியை அஜர்

போது. எறிகணையொன்று ஆரம்பப்பாடசாலை ஒன்றின் நூலகத்தில் விழுந்து வெடித்தது. தற்போது அங்குள்ள பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக நடந்து வந்த எறிகணைத் தாக்குதலினால் ஸ்ரீபனாகேட் மருத்துவமனையின் மகப்பேற்றுப் பகுதி சேதமடைந்தது. அதனால் மகப்பேற்றுப் பகுதி தற்காலிகமாகப் பாராளுமன்றக் கட்டடத்தின் கீழ்ப பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது நகரத்தின் முக்கிய மருத்துவமனை சென்ற திங்கள் ஆறுமுறை எறிகணைத் தாக்குதல்களுக்கு உள்ளானது. மருத்துவமனையின் சில பகுதிகள் சேதமடைந்த போதிலும் கட்டடத்தின் சில பகுதிகள் இன்னும் பாவிக்கப்பட்டு வருகின்றன. எக்ஸ்றே (Xray) ஈ.சி.ஜீ (E.C G) முதலிய அத்தியவசிய சேவைகளுக்கு ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகின்றது. வெப்ப நிலையில் வைத்திருக்கப்படவேண்டிய திரவ மருந்துவகைகளைப் பழுதறாமல் வைத்திருப்பதற்கு அடுப்புகளைப் பாவிக்கின்றனர்.

ஸ்ரீபனாகேட்டைச் சுற்றியுள்ள கிராமங்கள் அஜர்பைஜனுக்குச் சொந்தமானவை. இக்கிராமங்களில் இருக்கும் அஜர்பைஜான் பீரங்கிப் படையினரின் எறிகணைகள் பலமுறை ஸ்ரீபனாகேட்டைத் தாக்கியுள்ளன. ஆகத்தூரத்திலுள்ள அஜர்பைஜானியரின் பீரங்கித்தளம் ஸ்ரீபனாகேட்டுக்குத் தெற்கே 1500 யார் தொலைவுக்கு அப்பால் உள்ள மலைக்கும்பிலுள்ள சூசா (Shusha) என்ற நகரத்தில் உள்ளது. மாலிபெலி (Mali-beli) யிலிருந்து எறிகணைத்

மான இடத்தில் பத்துக்கூடும் பங்கள் வாழ்கின்றனர். எங்கள் சுதந்திரத்துக்காக எம் மக்களில் 30 வீதமானவரைப் பலிகொடுக்க நாம் தயார் எனப் பெருமையடிக்கின்றார் ஒரு குடியிருப்பாளர் அயலவர்கள் கூச்சலிட்டுஅவருடைய பேச்சை மறுதலிக்கின்றனர். நாங்கள் சிறு தொகையினர் எங்களால் இழப்புக்களைத் தாங்கமுடியாது என்று அந்தக் குடியிருப்பாளரைத் திருத்துகிறாவ ஒருபெண்மணி அமைதியான இரவு நேரங்களில் ஒரு சில மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வருகின்றனர். வீதிகளில் அலைந்துதிரியும் பசியால் வாடும் நாய்களுக்கு அவர்கள் பயப்படுகின்றார்கள். நகரத்துக் காவல்துறையினர் இந்த நாய்களை அழிப்பதாக உறுதி அளித்துள்ளனர். ஆனால் இரவில் தற்போது வீதிகள் நாய்களுக்குச் சொந்தமாகவுள்ளது

பிரிவினைவாதிகளின் வாழ்க்கைக்கு இன்னல்களை ஏற்படுத்த அஜர்பைஜானியர்கள் வேறு வழிகளைக் கடைப்பிடிக்கின்றனர். சென்ற மாத முற்பகுதியிலிருந்து நகரத்துக்கு மின்சாரம் இல்லை நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. நகரத்தில எட்டுப் பொதுக் கிணறுகளில் இருந்து நீர எடுத்துத் தங்கள்வாளிகளை நிரப்பச் சிலவேளைகளில் மணித்தியாலங்களும் சிலவேளைகளில்நாட்களும் செல்கின்றன. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் வரத்து தடைப்பட்டுள்ளது. ஆனால் நாகொர்னோ காராபாக் மக்கள் உணவுத் தட்டுப்பாட்டைத் தாங்கக் கூடிய நிலையில் உள்ளனர். கடும் குளிர் காலங்களில் பனிக்கட்டி வீழ்வ




தற்பொழுது இந்தப் பகுதிக்கோ அல்லது இங்கிருந்து வெளி இடங்களுக்கோ செல்வதற்கு உலங்கு வானூர்திகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சண்டையும் கால நிலையும் எப்பொழுதும் சீரில்லாத நிலையில் நீடித்திருப்பதால் வானூர்திகள் பயணத்திற்கென ஒரு நிலையானகால அட்டவணையைக் கூடத்தயாரிக்க முடியாதுள்ளது. அஜர்பைஜானுக்குச் சொந்தமான இரண்டு உலங்கு வானூர்திகள் விழுந்து நொருங்கியுள்ளன. இவை சுட்டு வீழ்த்தப்பட்டன என அஜர்பைஜான் கூறிய போதும் ஆர்மேனியர் இதை மறுக்கின்றனர். சென்ற வார முற்பகுதியில் நான்கு பிரிவினை வாதப் போராளிகள் தங்களுக்கு உதவுபவர்களின் உலங்கு வானூர்தியை எதிர்பார்த்துக்கொண்டு, அது இறங்கும் தளத்துக்கருகே காத்து நின்றனர். ஸ்ரீபனாகேட்டுக்கும் சூசாவுக்குமிடையேயுள்ள சோசெனசென்(Chochoeichen) என்ற கிராமத்தில் நடைபெற்ற தாக்குதலின் போது உயிர் நீத்த தமது நண்பனின் பூதவுடலை ஆர்மேனியாவின் தலைநகரமான யெறிவானுக்கு (Yerevan) எடுத்துச் செல்வதற்காகக் காத்திருந்தனர். உயிர்நீத்த அந்த நண்பனின் கடைசிப் பெயர் அவர்களுக்குத் தெரியாது. அவனது முதற்பெயர் ஒவிக் (Ovik) என்பதாகும். அவனைப் பார்த்தால் ஆசிய இனத்தவன் போன்று தோற்றமளித்தான். ஆதலால் போராளிகள் அவனைச் செல்லமாக உஸ்பெக் (Uzbek) என அழைப்பார்கள். அவனுக்குப் பெற்றோர்கள் இல்லை. ஆர்மேனியத் தலைநகரான யெறிவானில் அவனுடைய சகோதரன் ஒருவன் இருக்கின்றான். அவனிடம் ஒவிக்கின் பூதவுடலைச் சேர்க்கப்போகிறார்கள். இதுநடந்து மூன்று நாட்களுக்குப் பின் ஒவிக்கின் நான்கு நண்பர்களில் இருவரைக் காயங்களுடன் உலங்கு வானூர்தி ஏற்றிச் சென்றது. இந்த இருவரும் மாலிபெலித் தாக்குதலின் போது காயமுற்றிருந்தனர்.

### விரக்தி அதிகரித்தல்.

சண்டையில் ஈடுபட்டிருக்கும் இரு சாராரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால் இருசாராரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட முயல்கிறார்களில்லை. பேச்சுவார்த்தையைத் தொடங்க அஜர்பைஜான் விரும்புகின்றது என அஜர்பைஜான் பேச்சாளர் ஒருவர் சென்றவாரம் மொஸ்

ஆர்மேனியாவில் மக்களின் விரக்தி உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. அஜர்பைஜான் ஊடாகவே ஆர்மேனியா 80% வீதமான பொருட்களை இறக்குமதி செய்கின்றது. நாகொர்னோ காராபாக் கிளர்ச்சியினால் ஆத்திரமடைந்த அஜர்பைஜான் தங்கள் நாட்டுக்கு ஊடாகப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு ஆர்மேனியாவுக்குத் தடை விதித்துள்ளது. இப்பொருளாதாரத் தடை ஆர்மேனிய மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. நிலநெய், இயற்கைவாயு, மூலப்பொருள் ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆர்மேனியாவின் தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளன. அத்துடன் ஆர்மேனிய அரசு பொருளாதாரத்தில் இழிவு நிலையில் உள்ளது. அஜர்பைஜானியர்கள் இந்தக் கோரச் செயலை நிறுத்தாது விடின் அவர்கள் எல்லோரையும் கொல்லவேண்டும் என்கிறான், யெறிவானுக்குத் தெற்கே இருபது மைல் தூரத்திலுள்ள அறாற்றா பள்ளத்தாக்கில் வசிக்கும் ஜோர்ஜி கமோசியன் என்னும் வேலையற்ற ஓட்டுனர் எங்களுக்கு இயற்கைவாயு

**ஸ்ரீவ் லீ வைன**

இல்லை, மின்சாரம் இல்லை, அப்படி இருக்கும் பொழுது அவர்களுடன் என்ன இணக்கம் வேண்டியுள்ளது என மேலும் கூறுகின்றான்.

ருஷ்ய ஜனாதிபதி திரு. போரிஸ் யெல்சின் உட்பட வெளியேயுள்ள தலைவர்கள் எல்லோரும் ஒருவித இணக்கம் ஏற்படத் தெண்டிக்கின்றனர். ஆனால் இருபகுதியினரும் விட்டுக் கொடுப்பதாயில்லை சென்றவாரம் அமெரிக்க இராஜாங்கஅமைச்சர் திரு. ஜேம்ஸ் பேக்கர் இருநாட்டு ஜனாதிபதிகளையும் சந்தித்து, அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார். இருபக்கக் கருத்துக்களையும் கேட்டறிந்து கொள்வதால் அதில் இரு பகுதியினரும் ஒத்துவரக்கூடிய விடயங்கள் இருக்கும் என்கிறார் திரு. பேக்கரின் உதவியாளர். இந்தப் பிரச்சினையில் இரு பகுதியினரும் ஒத்துவரக் கூடிய விடயங்கள் எதுவுமில்லை. ஐரோப்பாவின் ஒற்றுமை பாதுகாப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைப்பு (Conference on Security of Cooperation in Europe) இங்குள்ள உண்மை நிலையை அறிவதற்கென ஒரு குழுவை இந்தவாரம் அனுப்பத்திட்டமிட்டுள்ளது. இந்நிலவும்

அரசியல் சதுரங்கத்தில் நிகழ்ந்த ஒருகாய் நகர்த்தலாகும்

பிரதமர் நரசிம்மராவின் சிறுபான்மை அரசிற்கு முதல் சோதனையாக அமைந்த வரவு செலவுத்திட்டம் ஒருவாறு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது. வரவு செலவுத் திட்டத்தின் சில பகுதிகளை பாரதீய ஜனதாக்கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் பலவும் எதிர்த்தபோதும் எதுவித விட்டுக் கொடுப்பும் இல்லாமல் சிறுபான்மை அரசாங்கம் நிறைவேற்றி விட்டது.

அதாவது பிரதமர்நரசிம்மராவின் 'கருத்தொற்றுமை அரசியலில்' வரவு செலவுத் திட்டம் குறித்து எதுவித கருத்தொற்றுமையும் ஏற்படாமலே வரவு செலவுத் திட்டம் நிறைவேறியுள்ளது. ஆனால் இதே போன்று தொடர்ந்தும் அரசியலை நடத்திச் செல்வதில் இந்திரா காங்கிரஸிற்குச் சிக்கல் உள்ளன.

இந்த வருடம் ஜூலை மாதம் 24ஆம் திகதியுடன் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனின் பதவிக்காலம் முடிவடைகிறது. அதேபோன்று செப்டம்பரில் உப ஜனாதிபதியின் பதவிக்காலமும் முடிவடைகின்றது. அடுத்து புதிய ஜனாதிபதியாகவும் உதவி ஜனாதிபதியாகவும் யார் தெரியப்படினும் அவர்களுக்கு பாரதீய ஜனதாக்கட்சியின் ஆதரவு மிகவும் அவசியமானதாகும். பாரதீய ஜனதாக்கட்சி எதிர்த்து வாக்கு அளித்தாலோ அன்றி ஏனையவை எதிர்க்கட்சிகளுடன் இணைந்து வாக்களித்தாலோ இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற முடியாது. இந்த நிலை ஒன்று ஏற்படுமானால் சிறுபான்மை அரசாங்கமான இந்திரா காங்கிரஸ் அரசாங்கம் தொடர்ந்து ஆட்சி நடத்துவதற்கு சில இடைஞ்சல்களும் சிக்கல்களும் தோன்றலாம். இந்த நிலையில் வரவுசெலவுத்திட்டத்தில் கருத்தொற்றுமை அரசியலைக் கைவிட்டது போன்று ஜனாதிபதித் தேர்தலில் கைவிட முடியாதநிலை பிரதமர் நரசிம்மராவிற்கு உள்ளது.

இதேவேளை கடந்த காலத்தில் ஓரளவு சுமுகமாக இருந்து வந்த பாரதீய ஜனதாக்கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சி உறவானது பாரதீய ஜனதா கட்சித்தலைவர் முரளிமனோகர் ஜோஷியின் பாதயாத்திரைத் தோல்வியும், வரவுசெலவுத் திட்டத்தில் ஏற்பட்ட நிராகரிப்பும், தற்பொழுது மீண்டும் உருவாகியுள்ள ராமர் கோயில் கட்டும் விவகாரமும் உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது இந் நிலையில் மீண்டும் உருவாகியுள்ள போபர்ஸ் விவகாரத்தால் மேலும் விரிசல் அடைவதையும் அதனால் ஜனாதிபதித் தேர்தலில் பாரதீய ஜனதாவுடன் ஏற்பட வேண்டிய கருத்தொருமைப்பாடு ஏற்படாமல் போவதை பிரதமர் நரசிம்மராவ் விரும்பவில்லை. இதனால் தனது அரசாங்கத்திற்கு ஏற்படப் போகும் பாதிப்புக்களும் நரசிம்மராவிற்கு நன்கு தெரியும்.

இந் நிலையில் தமது அரசாங்கத்தைக் காப்பாற்றும் நோக்கில் மாதவ்சிங் சோலங்கியை பிரதமர் நரசிம்மராவ் பலிக்கடாவாக ஆக்கி விட்டார். இதேவேளை வெளிவிவகார அமைச்சர் மாதவ்சிங் சோலங்கியின் செயற்பாட்டில் திரு. நரசிம்மராவ் திருப்தி கொண்டிருக்கவில்லை எனவும் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் சோலங்கியை அமைச்சரவையில் இருந்து வெளியேற்றியமை ஒரு கல்லில் இரண்டு மாங்காய் பிடுங்கும் இந்தியப் பிரதமரின் முயற்சியாகும்.

## சிறையிருந்து டைசன் தப்பினார்

அதிபார குத்துச் சண்டை ...ளில் சம்பியனாக விளங்கிய ...வரும், பாலியல் வன்முறை தொடர்பாக குற்றஞ் சாட்...ப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவருமான மைக் டைசன் சிறையிலிருந்து தப்பியோடியுள்ளார் எனத் தெரிய வருகிறது அவர் தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள ஒரு நாட்டுக்கு சென்றிருக்கலாமென ஊகிக்கப்படுகிறது.

தின் குடியரசுகளான ஆர்மேனியாவும் அஜர்பைஜானும் நான்கு வருடங்களாக இனரீதியான வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த இனத்துவேச வன்முறைகளில் நூற்றுக்கணக்கில் அஜர்பைஜான் முஸ்லிம்களும், ஆர்மேனியக் கிறிஸ்தவர்களும் இறந்துள்ளனர். அத்துடன் இவ்வன்முறைகள் ஆயிரக்கணக்கில் இருநாட்டு மக்களையும் இடப்பெயர வைத்துள்ளது அஜர்பைஜானால் முற்றாகச் சூழப்பட்டுள்ள 1700 சதுரமைல் பரப்பைக் கொண்ட நாகொர்னோ காராபாக் பகுதியை அஜர்பைஜான் கைவிட வேண்டுமென்று ஆர்மேனியர்கள் வலியுறுத்துகின்றனர். (நாகொர்னோ காராபாக் பகுதிக்கும் ஆர்மேனியாவுக்கும் அதிநெருங்கிய தூரம் ஏழு மைல்கள் ஆகும்.) இந்த மலைப்பிரதேசத்தில் வாழும் 2 00 000 மக்களில் சுமார் 90 வீதமானவர்கள் ஆர்மேனிய மக்களாகும் ஆர்மேனியாவின் பிடிவாதமான கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தனது கோரிக்கையை நிலைநாட்டும் வகையிலும் அஜர்பைஜான் தனது துருப்புக்களை நாகொர்னோ காராபாத்திற்கு அனுப்பி வைத்துள்ளது சென்ற திங்கள் நாகொர்னோ காராபாக் சுதந்திரப் பிரகடனம் செய்தது. இச்சுதந்திரப் பிரகடனத்தை இதுவரை எந்த வெளிநாடும் ஏற்கவில்லை. ஆர்மேனியா கூட இந்தச் சுதந்திரப் பிரகடனத்தை ஏற்று அந்த நாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் ஆர்மேனியா தார்மீக ஆதரவையும், எவ்வளவு கொடுக்கின்றார் என்ற எண்ணிக்கை தெரியாத அளவு சகலவிதமான பொருள்களையும் கொடுத்து அஜர்பைஜானுக்கு எதிரான சண்டையை ஊக்குவிக்கிறது. தங்கள் நட்பு நாடு தங்களுக்குத் துருப்புக்கள், ஆயுதங்கள், உணவு வகைகள் ஆகியவற்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் ஆனால் அவை போதாதிருப்பதாகவும் பிரிவினைவாதிகள் கூறுகின்றனர். அஜர்பைஜான் பீரங்கிப் படைப்பிரிவினர் மூன்று மாதங்களுக்கு முன் நாகொர்னோ காராபாக்கின் மலை உச்சியில் உள்ள தலைநகரமான ஸ்ரீபனாகேட் (Stepanakert)மீது எறிகணைத் தாக்குதலை நடத்தினர். நவம்பர் மாதத்தில் நடத்திய எறிகணைத் தாக்குதலின் வைத் திருப்பதற்கு அடுப்புகளைப் பாவிக்கின்றனர்.

ஸ்ரீபனாகேட்டைச் சுற்றியுள்ள கிராமங்கள் அஜர்பைஜானுக்குச் சொந்தமானவை. இக்கிராமங்களில் இருக்கும் அஜர்பைஜான் பீரங்கிப் படையினரின் எறிகணைகள் பலமுறை ஸ்ரீபனாகேட்டைத் தாக்கியுள்ளன. ஆகத்தூரத்திலுள்ள அஜர்பைஜானியரின் பீரங்கித்தளம் ஸ்ரீபனாகேட்டுக்குத் தெற்கே 1500 யார் தொலைவுக்கு அப்பால் உள்ள மலைக்கூம்பிலுள்ள சூசா (Shusha) என்ற நகரத்தில் உள்ளது. மாலிபெலி (Malibeli) யிலிருந்து எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதால் அக்கிராமம் அழிக்கப்பட்டது என்கிறார்கள் பிரிவினைவாதிகள். வீடுகளை எரிப்பது நாகரிகமற்ற செயலாக இருக்கலாம். ஆனால் அங்கே பீரங்கித்தளம் இருக்கும் போது அதனை அழித்தே ஆகவேண்டும் என்கிறார் ஆர்மேனியாவின் உதவிப்பாதுகாப்பு அமைச்சரும் நாகர்னோ காராபாக்கின் பிரதான இராணுவ ஆலோசகருமான சேர்க் சார்கிசியன் (Serg Sarkissian) அவர்கள், எறிகணைத் தாக்குதல்களை நிறுத்த எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வி அடைந்தன. சூசா மலைத்தொடரடியிலுள்ள கேர்க்ஜான் (Kerkyan) முதலாவதாகவும், மலிபெலி இரண்டாவதாகவும் பிரிவினைவாதிகளால் கைப்பற்றப்பட்டது. எறிகணைத்தாக்குதல்களை நிறுத்துவார்கள் என்ற எண்ணத்தில் தாங்கள் கைப்பற்றிய கிராமங்கள் அனைத்தையும் பிரிவினைவாதிகள் எரித்தனர். ஆனால் மற்றைய பீரங்கித்தளங்களிலிருந்து எறிகணைத் தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன தங்களால் பிடிக்கப்பட்ட கிராமங்களைப் பிரிவினைவாதிகள் எரிப்பதைவிட்டு அஜர்பைஜானியர்கள் அக்கறை காட்டாது மேலும் எறிகணைத் தாக்குதல்களில் தீவிரம் காட்டினர்.

### பசியால் வாடும் நாய்கள்

இரவு நேரம் வந்தவுடன் தலைநகரிலுள்ள அநேகமான மக்கள் எறிகணைத்தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாக்கும் வகையில் நிலவறைகளுக்குள் இருக்கின்றனர் கிறேகறி (Gregori) யிலுள்ள என்லைற்னர் (Enlightner வீதியில் இருக்கும் தொடர்மாடிக் கட்டடத்தின் அடித்தளத்தில் இருக்கும் 50 அடி அகல முற்பகுதியிலிருந்து நகரத்துக்கு மின்சாரம் இல்லை நீர்த் தேக்கங்களிலிருந்து நீர் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. நகரத்தில எட்டுப் பொதுக் கிணறுகளில் இருந்து நீர எடுத்துத் தங்கள்வாளிகளை நிரப்பச் சிலவேளைகளில் மணித்தியாலங்களும் சிலவேளைகளில்நாட்களும் செல்கின்றன. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் வரத்து தடைப்பட்டுள்ளது. ஆனால் நாகொர்னோ காராபாக் மக்கள் உணவுத் தட்டுப்பாட்டைத் தாங்கக் கூடிய நிலையில் உள்ளனர். கடும் குளிர் காலங்களில் பனிக்கட்டி வீழ்வதனால் இப்பிரதேசத்திற்கும் வெளி இடங்களுக்குமிடையிலான போக்கு வரத்துக்கள் தடைப்படுவது வழக்கம். அதனால்அவர்கள்மேமாதம் வரையிலும் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் மற்றும் பொருள்களையும் சேகரித்து வைப்பது வழக்கம்.

உலங்கு வானூர்தி ஏற்றிச் சென்றது. இந்த இருவரும் மாலிபெலித் தாக்குதலின் போது காயமுற்றிருந்தனர்.

### விரக்தி அதிகரித்தல்.

சண்டையில் ஈடுபட்டிருக்கும் இரு சாராரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால் இருசாராரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட முயல்கிறார்களில்லை. பேச்சுவார்த்தையைத் தொடங்க அஜர்பைஜான் விரும்புகின்றது என அஜர்பைஜான் பேச்சாளர் ஒருவர் சென்றவாரம் மொஸ்கோவில் தெரிவித்தார். ஆனால் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு முன் இந்த இரத்தக்களரி நிறுத்தப்படவேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார். இரத்தக்களரியை நிறுத்துவது அஜர்பைஜானின் கடமை என்று பிரிவினைவாதிகள் கூறுகின்றனர். இது இப்படியிருக்க பகுதியினரும் ஒத்துவரக்கூடிய விடயங்கள் இருக்கும் என்கிறார் திரு. பேக்கரின் உதவியாளர். இந்தப் பிரச்சினையில் இருபகுதியினரும் ஒத்துவரக் கூடிய விடயங்கள் எதுவுமில்லை. ஐரோப்பாவின் ஒற்றுமை பாதுகாப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைப்பு (Conference on Secunty of Cooperation in Europe) இங்குள்ள உண்மை நிலையை அறிவதற்கென ஒரு குழுவை இந்தவாரம் அனுப்பத்திட்டமிட்டுள்ளது. இங்கு நிலவும் இந்த முட்டுக்கட்டை நிலைமை இந்தக் குழுவின் முயற்சியினால் முறியடிக்கப்படலாம் என நினைக்கும் இரு நாடுகளும் இந்தக்குழுவை வரவேற்கின்றனர். ஆனால் சண்டை தொடர்கிறது.

(நன்றி நியூஸ் வீக்-24-2-1992)

## லிபியாவிற்கு எதிராக பொரு. தடை; ஐ. நா. பாதுகாப்புச் சபை ஆதரவு

(ஜெனிவா)

லிபியாவுக்குஎதிராக பொருளாதாரத் தடை விதிப்பதற்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபை வாக்களித்துள்ளது. இந்த வாக்கெடுப்பில் இந்தியா, சீனா உட்பட ஐந்து நாடுகள்கலந்துகொள்ளவில்லை.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள்பாதுகாப்பு சபையின் கூட்டத்தில் லிபியாவிற்கு எதிராக பொருளாதாரத்தடை கொண்டு வருவது குறித்த தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இந்தியா, சீனா,மொராக்கோ சிம்பாட்வே, கேப்வாடுஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை ஏனைய பத்து நாடுகளும்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

லொக்கர்ப்பீ விமானக்குண்டு வெடிப்பு தொடர்பான சந்தேகநபர்களான இரு அமெரிக்கப் பிரஜைகளையும் ஒப்படைக்க லிபியாதயக்கம்காட்டி வருவதே இத் தீர்மானம் கொண்டு வருவதற்கான காரணமாகும்.

இம்மாதம் பதினைந்தாம் திகதிக்கு முன்பாக இரண்டு சந்தேக நபர்களையும் லிபியா ஒப்படைக்கத் தவறினால் ஐ. நா அமைப்பு லிபியாவிற்கு எதிராக ஆயுத தடை விதிப்பதுடன் சர்வதேச விமான சேவை வசதிகளை நிறுத்தி விட்டு வெளிநாடுகளிலுள்ள லிபியாவின் ராஜதந்திரிகள் மீது கடும் நடவடிக்கைகளை அறிவிக்கும் என்று தெரிய வருகின்றது.

இதேவேளை ஐ. நா பாதுகாப்பு சபையின் இந்த முடிவு நியாயமற்றது என்று லிபியாவில் வெளியாகியுள்ள முதலாவது உத்தியோக பூர்வ அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது மேலும் இத்தகைய தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தமைக்காக அமெரிக்காவையும்பிரிட்டனையும் லிபியா குறைகூறியுள்ளது.

இதனிடையே பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச்சேர்ந்த பிரஜைகள் லிபியாவிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு லிபிய அரசு தடை விதித்துள்ளது.

### இந்தியா சிறை பிடித்த

## பாக். இராணுவத்தினரை விடுவிக்கக் கோரிக்கை

(டில்லி)

இந்திய இராணுவம் சிறை பிடித்து வைத்துள்ள பாகிஸ்தான் இராணுவத்தினர்நான்கு பேரையும் உடன் விடுதலை செய்யுமாறு பாகிஸ்தான் இராணுவத்துறை கேட்டுள்ளது.

எல்லைக் காவலில் இருந்த இந்த நான்கு பேரையும் இந்திய இராணுவம் கடத்திச் சென்றதாக பாகிஸ்தான் தரப்பில் சொல்லப்படுகிறது. இவ்வாறு இந்தியா நடந்து கொள்வது இரு நாட்டு உறவுகளை மேம்படுத்தாது எனவும் பாகிஸ்தான் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பி. பி. ஸி. முகவர் வீடு குண்டுவீச்சு

ஜம்மு காஷ்மீர் மாநிலத் தலைநகர் சிறீநகரில் இருக்கும் பி. பி.சி முகவரானயூசுப்ஜமீல் தங்கியிருந்த வீடு குண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளது. அடையாளம் தெரியாத சிலர் இக் குண்டு வீச்சு நடத்தினர்.

ஈழநாதம்

# மீண்டும் ஆயுதப் போராட்டம்; உல்பா இயக்கம் அறிவிப்பு

(டிஸ்பூர்)

ஆயுதப்போராட்டத்தை மீண்டும் தொடங்கப்போவதாக உல்பா தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

உல்பா இயக்கத்தின் தலைவர் அரவிந்தோ ராஜ்கோ இது குறித்த தகவல்களை அடக்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அரசுதான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாலும், 'தடா' சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்ட பதினான்கு உல்பா தலைவர்களை விடுவிக்கவில்லையென்றும் அரவிந்தோ ராஜ்கோ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உல்பா இயக்கத்தினரை ஆயுதங்களை கைவிடும்படி வற்புறுத்தியபோது அரசு சில கடுமையான நிபந்தனைகளை விதித்ததாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆகவே மீண்டும் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அசாம் மாநில அரசுக்கும், அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியான உல்பாவின் ஒரு பகுதியினருக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உல்பா அமைப்பு பிளவுபட்டிருப்பதாகவும், உல்பாவின் ஒரு பகுதியினருக்கு எதிராக அசாம் மாநிலத்தின் ஆறு மாவட்டங்களில் ஏற்கெனவே இராணுவத்தினர் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருப்பதாகவும் மாநிலஅரசு அறிவித்துள்ளது.

## இன்றையபோட்டி

யாழ்மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவுக்கான இன்றைய போட்டியில் திருமலை நட்சத்திரங்கள் அணியை எதிர்த்து கிராம முன்னேற்றச் சங்க அணி மோதவுள்ளது.

இப்போட்டி இன்றுமாலை 3.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## உணவு விடுதிகளில் திடீர்ப் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைப் பிரிவினுள் உள்ள உணவு தயாரிக்கும் நிலையங்கள், தேநீர்ச் சாலைகள், மதுபானச்சாலைகள் ஆகியன நேற்றுமுன்தினம் (31-03-92) அப்பகுதிப் பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. துமகாதேவன் தலைமையிலான ஐந்துபேர் கொண்ட குழுவினால் திடீர் பரிசோதனை செய்யப்பட்டது.

பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. சிவபாதராஜா, உணவு மருந்துப் பரிசோதகர் திரு. ஜீவநாதன், சுகாதாரக் கல்வியதிகாரி திரு. சிவலிங்கம், சுகாதாரத் தரிசிப்பாளர் திரு. விஜயசுந்தரம், ஆகியோரை உள்ளடக்கிய குழுவே இப் பரிசோதனையில் ஈடுபட்டது.

இதன்போது சுகாதார முறைக்கு ஒவ்வாத வகையில் செயற்பட்ட உணவு நிலையங்கள் எச்சரிக்கை செய்யப்பட்டதோடு நுகர்வோர் கேட்கும் உணவுப் பண்டங்கள் தவிர்ந்த ஏனைய உணவுப் பொருள்களை வெளியில் வைக்கவேண்டாம் எனவும் கோரிக்கை விடப்பட்டதாக பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. துமகாதேவன் தெரிவித்தார்.

(பா)

## சம்பளக் கொடுப்பனவு

லங்கா சீமெந்து லிமிட்டெட் ஊழியர்களுக்கான மாசி, பங்குனி மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் இன்று வியாழக்கிழமை சுன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளது.

அனைத்து ஊழியர்களையும் தவறாது தமது சம்பளக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும்படி லங்கா சீமெந்து லிமிட்டெட் உதவிப் பொது முகாமையாளர் கேட்டுள்ளார்.

(ச)

## ஆசிரியர் கலாசாலையில் அன்னைபூபதி நினைவு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலையில் அன்னை பூபதியின் 4ஆம் ஆண்டு நினைவு நிகழ்ச்சியாக அஞ்சலிக் கூட்டம் நேற்று பிற்பகல் 1 30 மணியளவில் கலாசாலையின் சுப்பிரமணிய மண்டபத்தில் நடைபெற்றது.

ஒன்றியத்தலைவர் ஆசிரியர் கு. இரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பரா மற்றும் சோ. பத்மநாதன் கு. சதாசிவமூர்த்தி ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள். இதனைத் தொடர்ந்து ''பூபதி என்றொரு காவியம்'' என்ற தலைப்பில் செல்வி வே. அருந்ததி தலைமையில் கவியரங்கமும் வேறும் பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## கம்பியூட்டர் மோசடிகள்; தடுக்கச் சட்டங்கள் இல்லை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது கம்பியூட்டர் தொழில் நுட்பம் பரவலாக பாவனைக்கு வந்துள்ள போதும் அதில் இடம்பெற்று வருகின்ற மோசடிகள் தொடர்பான குற்றங்களைக் கையாளுவதற்குத் தேவையான அளவுக்குச் சட்டங்கள் வகுக்கப்படவில்லை. இது ஒரு குறைபாடாகும். தற்போது இத்தகைய குற்றங்களும் சாதாரண சட்டங்களின் கீழேயே விசாரிக்கப்படுகின்றன. இதனால் பல சிக்கல்கள் எழ ஆரம்பித்துள்ளன என்று கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

'கம்பியூட்டர் மோசடிகள் தடுத்தலும் புலனாய்வும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு கடந்த சனியன்று ஹோட்டல் கலதாரி மெரிடியனில் நடைபெற்ற போது பேராசிரியர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கஐக்கிய ராச்சியம், ஜப்பான் போன்ற நாடுகளில் கம்பியூட்டர் தொடர்பான மோசடிகளை விசாரிக்க பிரத்தியேக சட்டவாக்கங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இலங்கையில் இப்போதுதான் இது பற்றிச் சிந்திக்கப் படுகிறது.

இது விடயத்தில் நீதிபதிகள் ஒரே வகையாகச் சந்தித்து ஒரேவகையான குறிப்பிட்ட ஒரேவகையான தீர்ப்புகளை வழங்கும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. நீதிபதிகள் தாமாகவே தமக்குத் தோன்றிய விதத்தில் தீர்ப்பளித்துள்ள பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இது எதிர்காலத்தில் ஆபத்தான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் என்றார்.

## புதிய பணிப்பாளராக இரத்தினசபாபதி

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்தியத்தின் புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் பி. இரத்தினசபாபதி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சாவகச்சேரி சுகாதாரவைத்திய அதிகாரியாக இதுவரை கடமையாற்றிய இவருக்கு இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இன்று முதல் இவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்க உள்ளார் (க)

# எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டை மத்திய அரசாங்கம் மறுப்பு

(டில்லி)

போபர்ஸ் வழக்கை தொடர்ந்து விசாரிப்பதை தாமதப்படுத்துமாறு சுவிட்சலாந்து அரசைக் கேட்டுக்கொண்டதாக கூறப்படும் குற்றச் சாட்டுக்களை இந்திய மத்திய அரசு வன்மையாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் நேற்று இந்திய பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையொன்றில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி சுவிட்சலாந்து வெளியுறவு அமைச்சரிடம் கையளித்த குறிப்பினால் இந்திய மத்திய அரசின் நிலை மாறுபட்டிருப்பதாகக் கூறுவது அர்த்தமற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மத்திய புலனாய்வுத் துறை இவ் வழக்கைத் தொடர்ந்து விசாரித்து வருவதாகவும், சட்டப்படி இவ் விசாரணை தொடரும் எனவும், இதில் மத்திய அரசு உறுதி கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சரின் அறிக்கை படிக்கப்பட்டபின் சபையில் கொந்தளிப்பு ஏற்பட்டது.

## கடிதத்தின் நகலை ஒப்படைக்க கோரிக்கை

(டில்லி)

பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் சபையில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன், மாதவ்சிங் சோலங்கி வழங்கியகடிதத்தின் நகல் பிரதியும் சபையில் தாக்கல் செய்யப்படவேண்டும் என்று மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அமோலி தத்தோ கேட்டுக்கொண்டார்

## துறைமுகம் திருத்துவதற்கு 200 பை சீமெந்து வரும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தின் இறங்கு துறைப் பகுதியைத் திருத்தி அமைப்பதற்கு சுமார் 200 பக்கட் சீமெந்து கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட இருக்கிறது.

இதற்கான அனுமதியைசிறிலங்கா கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் யாழ். அரசாங்க அதிபருக்கு வழங்கியிருக்கிறது.

எனினும் முதற்கட்டமாக 100 பக்கட் சீமெந்து மட்டுமே இங்கு அடுத்ததாக வர இருக்கும் கப்பல் மூலம் எடுத்து வரப்பட இருக்கிறது. மீதி பின்னர் எடுத்து வரப்படும் என தெரியவருகிறது. (க)

## தமிழகத்தில்

## அரசுக்கு எதிரான ஆசிரியர் கல்வி அமைச்சர் எச்சரிக்கை

(சென்னை)

நாட்டுக்கும், அரசுக்கும் எதிராக செயல்பட்டு பிரிவினையைத் தூண்டும் ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில கல்வி அமைச்சர் அரங்கநாயகம் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

கல்வித்துறைக்கான மானிய ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய அவர் மேலும் கூறுகையில் தமிழகத்தில் எழுத்தறிவு பெற்றோரின் சதவிகிதம் அறுபத்து நான்கு சதவிகிதத்துக்கு உயர்ந்திருப்பதாகவும் இதனால்தமிழகம்முழு இந்தியாவிலுமே இரண்டாவது இடத்திலிருப்பதாகவும் தெரிவித்தார்.

## கிராமத்து வெளியில் தரையிறங்கிய விமானம்

இந்தியா - பங்களாதேஷ் எல்லைக்கு சமீபமாக உள்ள கிராமம் ஒன்றின் வெளியான பிரதேசத்தில் நேற்று விமானமொன்று திடீரெனத் தரையிறங்கியது ரஷ்யாவின் இந்த விமானம் எரிபொருள் இல்லாமையால் திடீரென தரையிறங்க நேர்ந்துள்ளது.

பர்மாவின் தலைநகர் ரங்கூனில் எரிபொருள் நிரப்ப திட்டமிட்டிருந்த இவ்விமானப் பயணம் ரங்கூன் அதிகாரிகள் தரையிறங்க அனுமதி மறுத்தமையினால் எரிபொருள் இல்லாத நிலையை அடைந்தது.

விமானம் சேதமடைந்ததாகவோ, பயணிகள் மற்று விமானிகள் உயிரிழந்ததாகவோ தெரியவரவில்லை.

## பியகமையில்

ஆவணங்கள் அனைத்தும் பியகமையிலுள்ள புதிய பிராந்திய செயலகத்துக்குக் கொண்டு வரப்படும்.

## நியமனம்

யாழ் கிளை யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது,

பாடம் : பௌதிகவியல்

அலகு : ஒளியியல்

ஆசிரியர்: திரு. வர்ணம்

திகதி : 05 - 04 - 92

நேரம் : நண்பகல் 12.00 --- 1.00

## தியாக அன்னை பூபதி

## தமிழீழத்தாயின்

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



சுதந்திர வேட்கையினால்
உன் பசியை மறந்தாய்
இலட்சிய வேட்கையினால்
உன் உடலை உருக்கினாய்
தமிழீழ தாகத்தினால்
உண்ணா நோன்பிருந்தாய்
மாதர்குல மாணிக்கமாய்
தமிழீழத்தில் திகழ்கின்றாய்

இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
இன்பருட்டி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு

(2401)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பாத யாத்திரை மாபெரும் வெற்றியாம்

(கொழும்பு)

அரசுக் கெதிராக நடத்தப்பட்டபாதயாத்திரை நேற்றுக் கதிர்காமத்தில்மேளஒலிகளுடனும் அரசுக் கெதிரான சுலோகங்களுடனும் முடிவடைந்தது.

இந்த ஊர்வலம் பெரும் வெற்றி என்றும் அரசுக்கு எதிர்ப்புக் காட்ட மக்கள் அஞ்சவில்லை என்பதையும் இந்த ஊர்வலம் காட்டுகிறது என்று பாதயாத்திரையை ஏற்பாடு செய்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் மகிந்தா ராஜபக்ஷ கூறினார்.

## போராட

வேண்டியவர்கள் பிரதேசக் கல்விப் பணிப்பாளரினதும் மத்திய அமைச்சினதும் ஒத்தாசையுடன் கல்வி மேற்பார்வை செய்ய முற்பட்டுள்ளனர். இவ்விதமான அதிகாரிகள் கல்வி நிர்வாகத்தையோ அல்லது மேற்பார்வையோ செய்வதை அனுமதிக்க முடியாது, இவ்வகையான நிர்வாகத்தை சிறிலங்கா அரசு தமிழர் கல்வியை சீரழிக்கும் நோக்கத்துடன் திட்டமிட்டே செய்துவருகின்றது.

இவ்வகையான திட்டமிட்ட கல்விச் சீரழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட தமிழர் ஆசிரியர்களைத் தயாராகுமாறு பொதுச் செயலாளர் கோரினார்.

## கோஸ்ரிக்

கொழும்பு சென்றிருக்கும் யாழ். அரசாங்க அதிபர் இவ் அனுமதியைப் பெற்றிருப்பதாக நேற்றுக் காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## 16 வயது

முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும்;

இவர்கள் தங்களது விண்ணப்பங்களை ஒக்டோபர் மாதத்திற்கு முன்பதாக சமர்ப்பிக்குமாறு கல்லூரி அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள் என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## பல்கலைக்கழக மாணவர் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் நான்கு மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இடம்பெறவுள்ளது. அனைத்து மாணவர்களையும் தவறாது சமூகம் தரும்படி யாழ். பல்கலைக்கழக மாணவரவைவேண்டுகோள் விடுத்துள்ளது.

## இளைஞர்

ஓலை வெட்டுவதற்காகப் பனை மரத்தில் ஏறியபோது வீழ்ந்து படுகாயமடைந்தவராவார். (ச)

## சிகிச்சை

எக்ஸ் கதிர் கிசிச்சை பெற்று வருகிறார்கள்.

வைத்தியசாலையில் உள்ள கோபால்ட் இயந்திரங்கள் 20 வருடங்களுக்கு முந்தியவை. மூன்று மாதங்களுக்கிடையில் புதியஇயந்திரங்களைக் கொள்வனவு செய்ய சுகாதார அமைச்சு முயற்சிப்பதாத் தெரிவிக்கப்படுறது.

## வாழ்க்கை

திகதி ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு மேற்படி வழங்கப்படுவது நிறுத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இடம் : யூனிவேர்சல்
கந்தர்மடம் (சி/4205)

பாடம்: தாவரவியல்
அலகு: தாவர உடற்றொழிலியல்
ஆசிரியர்: திரு. ஐங்கரநேசன்
திகதி:- 5- 4- 92
நேரம்:- பி. ப. 5. 30 - 6. 30
இடம்:- யூனிவேர்சல்
கந்தர்மடம்
(சி/4207)

பாடம்:- விலங்கியல்
அலகுகள்:- 1) தொகுதிகள் (93)
2) பொருளாதார விலங்கியல் (92)
ஆசிரியர்:- திரு. நாகநாதன்
திகதி:- 5-4-92
நேரம்: 1) 1. 30 - 2. 30 (93)
2) 5. 30 - 6. 30 (92)
இடம்:- யூனிவேர்சல்
கந்தர்மடம் (சி/4206)